**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.5/2025 இன் ஆர்.சி.ஓ.பி.எண்.31/2017**

பசுபதி ... மனுதாரர்/1 ம் எதிர்மனுதாரர்

–எதிர்–

1) மரியம்

2) M.A.அப்துல் வதூத் ... எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

3) மாடசாமி ... எதிர்மனுதாரர்/2 ம் எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 01.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.E.துரை அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக உள்ள நிலையில், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து மேலும் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி, மனுதாரரால் கட்டளை 18 விதி 17 மற்றும் 151 சி.பி.சி.ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர், அசல் மனுவின் 1 ம் எதிர்மனுதாரர் என்றும், இந்த வழக்கு தற்போது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் ஆணையர் அறிக்கை, பொறியாளர் மதிப்பீட்டு அறிக்கையை பற்றி

ம.சா.1 ஐ மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்த மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே, அசல் மனுவில் ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமெனக் கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரர் தாக்கல் செய்த மனு சட்டப்படிக்கும், பொருண்மைகளின் படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இம்மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும், அசல் மனுவானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், அசல் மனுவை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு அசல் மனுவில் ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவின் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். இம்மனுவின் 1, 2 எதிர்மனுதாரர்கள் அசல் மனுவின் மனுதாரர்கள் ஆவார்கள். இம்மனுவின் 3ம் எதிர்மனுதாரர் அசல் மனுவின் 2ம் எதிர்மனுதாரர் ஆவார்.

7) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், அசல் மனுவானது வாதுரைக்காக கடந்த 24.09.2025ம் தேதி முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த சூழ்நிலையில், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு ஏற்கனவே நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் பொறியாளர் மதிப்பீட்டு அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியும். பொறியாளரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். இரு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு பின்னர், மீண்டும் ம.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென மனுதாரர் கோருவது அவர்களது சாட்சியத்தை விடுபட்ட குறைகளை சரி செய்வதற்கு வாய்ப்பு உள்ளது.

8) அசல் மனுவானது தாக்கல் செய்யப்பட்டு 8 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதையும், ம.சா.1–ன் குறுக்கு விசாரணையானது 24.10.2024ம் தேதி முடிக்கப்பட்டு விட்டது என்றும், மேற்படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, ஒரு வருடம் கழித்து இம்மனுவை போதுமான காரணமும் இன்றி வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட போது, ம.சா.1ஐ மீண்டும் அழைத்து மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்று கோருவது ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் இம்மனு அனுமதிக்க உகந்ததல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம்

செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 19.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.19 18:06:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>இரு தரப்பிலும் சாட்சிகள், சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 19.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.19 18:06:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.5/2025 இன்</u>**

**<u>ஆர்சி.ஓ.பி.எண்.31/2017</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**<u>19.11.2025.</u>**